**O.S.No. 33/2014 PW1 – காமாட்சி பெரியசாமி (எ) கோகுல் 10.08.2023**

சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என்னுடைய சொத்தை ஏமாற்றி கிரயம் பெற்றுள்ளதால், அதை ரத்து செய்ய வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தற்போது தளவாப்பாளையத்தில் வசித்து வருகிறேன். கோயம்புத்தூரில் வசிக்கவில்லை. கல்லூரியில் படிக்கும்போது அங்கு படித்து வந்தேன். எனது திருமணம் பதிவு திருமணம். நான் திருமணத்திற்கு பிறகு கோயம்புத்தூரில் வசித்து வந்தேன். 2010 ம் வருடத்தில் எனக்கு திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பிறகு நானும், என் மனைவியும் தனிக்குடுத்தனமாக வாழ்ந்து வந்தோம். அப்போது என் குடும்ப செலவுகளுக்காக வெளிநபர்களிடம் நான் கடன் வாங்கியிருந்தேனா என்றால் வாங்கவில்லை. 2014 ம் வருடம், 14 ம் தேதி என்னை கோயம்புத்தூரிலிருந்து கடத்தினார்கள். பொலிரோ ஜீப்பில் என்னை ஐந்து நபர்கள் இரவு 8.00 மணிக்கு கடத்தி வந்தனர். கோயம்புத்தூரில் சேரன் மாநகரிலிருந்து கடத்தி வந்தனர். சேரன் மாநகர் பகுதியில் காவல்நிலையம் உள்ளது. என்னை கடத்தியது சம்மந்தமாக நான் புகார் கொடுத்தேனா என்றால் அந்த சூழ்நிலையில் நான் கொடுக்கவில்லை. என்னை யாரும் கடத்தவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. பொது அதிகார ஆவணம் எங்கு வைத்து எந்த தேதியில் எழுதிக்கொடுத்தேன் என்று ஞாபகமில்லை. பவர் பத்திரம் எந்த இடத்தில் வைத்து எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது. பதிவு செய்யும்போது என்னிடம் சார்பதிவளார் கேள்வி கேட்டாரா என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. பவர்பத்திரம் பதிவு செய்தபிறகு, எத்தனை நாள் கழித்து கிரயம் எழுதிக்கொடுத்தேன் என்றால் அதுபற்றி ஞாபகமில்லை. கிரயப்பத்திரம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் என்னை கூட்டிச்சென்று எழுதி வாங்கினார்கள். எங்கு வைத்து எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது. கோயம்புத்தூரிலிருந்து என்னை கடத்தி வந்து எங்கு வைத்திருந்தார்கள் என்றால் கரூரில் ஒரு மெயின்ரோட்டிற்கு அருகிலுள்ள பங்களாவில் அடைத்து வைத்திருந்தார்கள். எத்தனை நாட்கள் அடைத்து வைத்திருந்தார்கள் என்றால் சுமார் ஒரு மாதம் அடைத்து வைத்திருந்தார்கள். அங்கு 8, 10 பேர் இருந்தனர். வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தில் நான் ஒரு புகார் கொடுத்தேன். அந்த புகாரில் மோகன்ராஜ் என்னை கடத்திச்சென்றார் என கூறியிருந்தேன். அந்த புகார் விசாரணையில், இருதினங்கள் கழித்து, என்னை யாரும் கடத்தவில்லை என்றும், நான் சுயநினைவுடன்தான் இருக்கிறேன் என வாக்குமூலம் .....

அளித்தேன் என்றால் என்னை வற்புறுத்தி எழுதி வாங்கினார்கள். என்னை கடத்திச்சென்ற பிறகு, எத்தனை நாள் கழித்து நான் தப்பிச்சென்றேன் என்றால் ஞாபகமில்லை. நான் தப்பிச்சென்று, என் அம்மாவை பார்த்துவிட்டு, தளவாப்பாளையத்திற்கு சென்றேன். அதன்பிறகு, கிரயம் பற்றிய விவரம் எவ்வளவு நாளில் தெரியவந்தது என்றால் அங்கிருந்து வந்த ஒருமாதத்தில் தெரியவந்தது. அதன்பிறகு, நான் கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன். அந்த புகார் என்ன ஆனது என்றால் தற்போது வரை நிலுவையில் இருந்து வருகிறது. என்னை கடத்தியது சம்மந்தமாகவும், என்னை மோசடி செய்து கிரயம் பெற்றது சம்மந்தமாகவும் நான் எத்தனை புகார் கொடுத்தேன் என்றால் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் விசாரணையில், என்னை யாரும் கடத்தவில்லை என்றும், நான் நல்ல முறையில் இருக்கிறேன் என்றும் வாக்குமூலம் அளித்தேன் என்றால் ஞாபகமில்லை. எந்த தேதியில் நான் பிரதிவாதிக்கு கிரயம் எழுதிக்கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. இவ்வழக்கை நான் 2017ம் வருடம் தாக்கல் செய்தேன். இவ்வழக்கிற்கான விவரங்களை நானும், என் அம்மாவும் வழக்கறிஞருக்கு சொன்னோம் என்றால் இல்லை. வழக்கை காலதாமதமாக தாக்கல் செய்ததற்கு குறிப்பிட்டு காரணம் கூற முடியுமா என்றால் கூற முடியாது. எனது அவசர தேவைக்காகவும், எனது குடும்ப செலவிற்கு நான் வெளிநபர்களிடம் பெற்ற கடன்களை அடைப்பதற்காகவும், சொத்தை விற்பனை செய்தேன் என்றும், தற்போது சொத்தின் மதிப்பு அதிகமாகிவிட்டதால், பொய்யான சங்கதிகளுடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்னபடி, பிரதிவாதி என்னை கடத்திச்சென்று, வலுக்கட்டாயப்படுத்தி வழக்குச்சொத்தை கிரயம் பெறவில்லை என்றும், சரியான மறுபயனுக்கு கிரயம் பெற்றுள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. இதே சொத்து சம்மந்தமாக என் அம்மா ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு நான் முறையாக கிரயம் செய்துக்கொடுத்துவிட்டு, சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னை பிரதிவாதி கடத்திச்செல்லவில்லை என்றும், அதனால்தான் 10 வருடகாலமாக தாமதப்படுத்தி வருகிறேன் என்றும் .....

சொன்னால் சரியல்ல. நான் நல்ல நிலையிலிருந்து கிரயம் செய்துக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் பொய்யான சங்கதிகள் கூறி வழக்கு தாக்கல் செய்துள்ள காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.